முழுப் பதிப்புரிமையுடையது

## இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்

## AA3 பரீட்சை – 2016 யூலை

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2016-07-16
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 09
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பகுதி A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

"AAT சிறீலங்கா அங்கத்தவர்கள் தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் கோவையில் (Code of Ethics) குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தத்துவங்களுக்கு அமைவாக தொழிற்படுதல் வேண்டும்".

(A) தொழில்சார் கணக்காளர்களுக்கான நெறிமுறைக் கோவையில் குறிப்பிடப்பட்ட அடிப்படைத் தத்துவங்களுள் ஒன்று ''ஒருமைப்பாடு (Integrity)".

இந்தத் தத்துவத்தினை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) ஒரு தொழிற்பயிற்சியாளர் / கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய உறுதிப்பாட்டு ஈடுபடுத்தல்களின் (assurance engagements) இரண்டு (02) வகைகளையும் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 02

கூட்டிணைவு ஆளுமை மீதான சிறந்த செயற்பயிற்சிக் கோவையினை (The Code of Best Practice) இரண்டு (02) பிரதான பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவை பணிப்பாளர்களினதும் அதேபோன்று பங்குதாரர்களினதும் சில கடமைகளைக் குறிப்பிடுகின்றன. பணிப்பாளர்கள் பங்குதாரர்களின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாக (trustees) / முகவர்களாகச் (agents) செயற்படுகின்றனர்."

(A) ''முகவராண்மை முரண்பாடு (Agency Conflict)" என்பதனை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(B) கூட்டிணைவு ஆளுமை மீதான சிறந்த செயற்பயிற்சிக் கோவை கோடிட்டுக் காட்டும், பணிப்பாளர் சபைக்கான வழிகாட்டல்கள் (guidelines) இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

(A) கணக்காய்வு நிறுவனமொன்றில் தரக்கட்டுப்பாட்டு முறைமையொன்றின் மூலகங்கள் (elements) மூன்றினைக் (03) **கூறுக.** (03 புள்ளிகள்)

(B) **சமித்** என்பவர் **வரையறுக்கப்பட்ட K&P கம்பனியின்** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வினை மேற்கொள்ளும் கணக்காய்வு அணியின் அங்கத்தவராவார். அவர் ஆண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரண சேர்ப்பனவுகளை கணக்காய்வு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளார். ஆண்டிற்கான வரைவு நிதிக் கூற்றுக்களின்படி, இந்த ஆண்டின் போது ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கான சேர்ப்பனவுகள் பொருண்மை யானவையாகக் கருதப்படுகிறது.

ஆதனம், பொறி மற்றும் உபகரண இறுப்பினை அறுதியீடு செய்வதற்கு (verify existence) **சமித்** மேற்கொள்ளக்கூடிய ஒரு கணக்காய்வு விதிமுறையை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

"சில கணக்கு மீதிகளுக்கு மற்றும் ஊடுசெயல்களுக்கு ஆதாரமாக கணக்காய்வாளர் மூன்றாம் தரப்பினரின் உறுதிப்படுத்தல்களைப் பெறுவர்".

(A) கணக்காய்வாளர் வெளிவாரி உறுதிப்படுத்தல்களை பயன்படுத்தக்கூடிய நான்கு (04) சந்தர்ப்பங் களைக் **கூறுக.** (04 புள்ளிகள்)

(B) கணக்காய்வாளரால் அனுப்பப்படும் வெளிவாரி உறுதிப்படுத்தற் கோரிக்கைக்கு பெறப்படும் பதிலிறுத்தல் தொடர்பில் சந்தேகத்தினைக் காட்டக்கூடிய ஒரு (01) காரணியை **இனங்காண்க.** (01 புள்ளி)

(மொத்தம் 05 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## **பகுதி B**

இந்தப் பகுதியிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

**வரையறுக்கப்பட்ட ரண்மால் லங்கா (தனியார்) கம்பனியானது (RLPL)** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த நிதியாண்டின்போது ரூ. 600 மில்லியன் கிரயத்தில் கட்டடமொன்றினை நிருமாணித்துள்ளது. இந்த ஆண்டின்போது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்தக் கட்டடம் ஆண்டின்போது மூலதனப் படுத்தப்படாமையினை **RLPL** இன் கணக்காய்வாளர் அவதானித்துள்ளனர். கட்டடத்தின் கிரயம் நிதிக் கூற்றுக்களில் மூலதனப் புத்துருவாகும் வேலைகளின் கீழ் (capital work in progress) காட்டப்பட்டிருந்தது. கட்டடத்தின் கிரயம் சரியாக மூலதனப்படுத்தப்பட்டிருப்பின், ஆண்டின்போது மேலதிக தேய்மான அறவீடாக ரூ. 15 மில்லியன் இருந்திருக்கும். 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின்போது **RLPL** இன் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட இலாபம் ரூ. 90 மில்லியனாகும்.

***நீர் செய்யவேண்டியது,***

(A) **RLPL** இன் கணக்காய்வாளரின் அறிக்கையில் மேலே தரப்பட்டவற்றின் தாக்கத்தினை **விபரிக்குக.**

(04 புள்ளிகள்)

(B) கணக்காய்வாளரின் அறிக்கையொன்றில் ‘‘விடயத்தின் அழுத்திக் கூறற் பந்தி (emphasis of matter paragraph)’’ என்றால் என்ன என்பதனை **விபரிக்குக.** (03 புள்ளிகள்)

(C) கணக்காய்வாளர்களின் அறிக்கையின் ‘‘அறிமுகப் பந்தியில் (introductory paragraph)’’ தெரிவிக்கப் பட்டிருக்கும் முக்கிய விடயங்கள் மூன்றினை (03) **கூறுக.**

(03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

**வரையறுக்கப்பட்ட ஸ்மைல் சுப்பர் (தனியார்) கம்பனியின் (SSPL)** கணக்காய்வாளராக **KK அசோசியேற்ஸ்** நியமிக்கப்பட்டுள்ளது. **SSPL** இன் கணக்காய்வுக்குப் பொறுப்பான பங்காளரான **கமல்,** கீழ்வரும் விடயங்கள் பற்றி கணக்காய்வுக் குழாமுடன் கலந்தாலோசித்துள்ளார்.

(1) கணக்காய்வு வேலைகளை ஆரம்பிக்க முன்னர் **SSPL**, அதன் தொழிற்றுறை மற்றும் அதன் சூழல் பற்றிய விளக்கத்தினைப் பெற்றுக்கொள்ள வேண்டியதன் முக்கியத்துவம்.

(2) கணக்காய்விற்காகச் சேமிக்கப்பட்ட சான்றுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட வேலைகளை உரிய காலத்தில் நடப்புக் கணக்காய்வுக் கோப்பில் ஆவணப்படுத்துவதன் முக்கியத்துவம்

(3) கணக்காய்வினை மேற்கொள்வதில் விசேடமாக மோசடி தொடர்பான இடரினைக் கவனத்திற் கொள்ளும்போது தொழில்சார் சந்தேகப் போக்கின் (professional skepticism) பயன்பாடு

(4) கணக்காய்வு தொடர்புபட்ட கணிசமான இடர்ப் பகுதிகள்

கீழ்வரும் விதிமுறைகளை (procedures) மேற்கொள்ளுமாறு **கமல்** கணக்காய்வுக் குழாமிற்கு ஆலோசனை வழங்கியுள்ளார்:

**(I)** விற்பனை வெட்டுப் புள்ளி (Sales cut-off)

**(II)** விலைப்பட்டியல்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா என்பதை அறுதியீடு செய்வதற்கு (verify) மாதிரியைத் தெரிவு செய்தல்

**(III)** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் என்பவற்றின் தேய்மானம் மீதான கணக்கீட்டுக் கொள்கை யினை மீளாய்வு செய்தல்

**(IV)** தெரிவு செய்யப்பட்ட சில கடன்பட்டோர்களிடமிருந்து 2016 மார்ச் 31 ஆந் திகதி நிலுவையிலிருந்த மீதிகளுக்கான நேரடி உறுதிப்படுத்தல்களை (direct confirmations) கோருதல்

***நீர் செய்யவேண்டியது,***

**(A)** நடப்புக் கணக்காய்வுக் கோவை கொண்டிருக்கும் மூன்று (03) ஆவணங்களை **நிரற்படுத்துக**.
(03 புள்ளிகள்)

**(B)** **SSPL** இன் கணக்காய்வு அணி கம்பனி, அதன் தொழிற்றுறை மற்றும் சூழல் தொடர்பான விளக்கத் தினைப் பெறக்கூடிய மூன்று (03) வழிகளைக் **கூறுக.** (03 புள்ளிகள்)

**(C)** மேலே நிரற்படுத்தப்பட்ட **(I)** முதல் **(IV)** வரையான விதிமுறைகள் ஒவ்வொன்றும் குறிப்பிடும் நிதிக் கூற்று உறுதிப்பாட்டினை (financial statement assertion) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

(A) "நிறுவனமொன்றிற்கு அகக் கட்டுப்பாட்டு முறைமை முக்கியமானதாகும்"

***நீர் செய்யவேண்டியது,***

**(a)** அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றின் குறிக்கோள்கள் இரண்டினை (02) **குறிப்பிடுக.**
(02 புள்ளிகள்)

**(b)** அனுசரணை வழங்கும் அமைப்புகளின் குழு (Committee of Sponsoring Organizations') அகக் கட்டுப்பாட்டு முறைமை வேலைச் சட்டகத்தின் கூறுகள் இரண்டினை (02) **நிரற்படுத்துக.**
(02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ஜெயா எக்ஸ்போட்ஸ் (தனி) கம்பனியானது (JEPL)** தூய தேங்காயெண்ணெயை உற்பத்தி செய்கின்றது. கம்பனி அதன் பிரதான உற்பத்திப் பொருளினை ஜேர்மனிக்கு ஏற்றுமதி செய்வதுடன் தேங்காய்ச் சிரட்டைகள் மற்றும் டெஸிக்கேற்றட் (துண்டுகளாக்கிய) தேங்காய் ஆகிய சில உப உற்பத்திப் பொருட்களை உள்நாட்டுச் சந்தையில் விற்பனை செய்கின்றது.

தேங்காய்ச் சிரட்டைகளை வாங்கும் வாடிக்கையாளர்கள் அநேகமாக பணமாகச் செலுத்துகின்றனர். இந்தக் கம்பனியின் கணக்காளரான ***அமாலி*** என்பவர் வாடிக்கையாளரிடமிருந்து பணத்தைச் சேகரிப்பதற்குப் பொறுப்பாளர் ஆவார். அவர் இந்தப் பெறுவனவுகளை பணப் பெறுவனவாக சிற்றுக் காசேட்டில் பதிவு செய்வதுடன் இந்தப் பணத்தை அன்றாடச் செலவுகளுக்காகப் பயன்படுத்துகின்றார்.

சில உள்நாட்டு வாடிக்கையாளர்கள் **ஜெயா எக்ஸ்போட்ஸ் (தனியார்) கம்பனியிடம்** வாங்கும் டெசிக்கேற்றட் தேங்காய்க்கு காசுக் காசோலைகள் (cash cheques) மூலம் கொடுப்பனவு செய்வதுடன் ***அமாலி*** இந்தக் காசோலைகளை வங்கியிலிருந்து பணமாக மாற்றி சிற்றுக் காசேட்டில் பணப் பெறுவனவாகப் பதிவு செய்கிறார்.

சகல வெளிநாட்டு கொள்வனவாளர்களும் தாம் செலுத்த வேண்டிய தொகைகளை நேரடியாக கம்பனியின் ஐக்கிய அமெரிக்க டொலர் வங்கிக் கணக்கிற்கு (USD Bank account) அனுப்புகின்றனர்.

**நீர் செய்யவேண்டியது,**

(a) மேலே விபரிக்கப்பட்டுள்ள அகக் கட்டுப்பாட்டு முறைமையில் உள்ள அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மூன்றினை (03) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(b) மேலே (a) இல் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலவீனத்திலிருந்தும் விடுபட **JEPL** இன் முகாமைக்கு, ஒவ்வொரு பரிந்துரை வீதம் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B யின் முடிவு*

## பகுதி C

இந்தப் பகுதியிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

### வினா 08

(A) "கணக்காய்வுச் சான்றுகளின் பொருத்தத்தன்மை (appropriateness) சான்றுகளின் தரம் அல்லது நம்பகத்தன்மையுடன் தொடர்புபட்டதாகும்".

கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கான நான்கு (04) வகையான கணக்காய்வு விதிமுறைகளை **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(B) (a) **வரையறுக்கப்பட்ட சொலிட் டயர்ஸ் (தனியார்) கம்பனியானது (ST)** டயர்களை (tyres) உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்கின்றது. கீழே தரப்பட்டுள்ள தகவல்கள் **ST** தொடர்புபட்டவையாகும்:

| | **மார்ச் 31** | |
|---|---|---|
| | **2016 (ரூ.)** | **2015 (ரூ.)** |
| மூலப் பொருட்கள் | 414,300 | 364,250 |
| புத்துருவாகும் வேலைகள் | 154,420 | 95,610 |
| முற்றுப்பெற்ற பொருட்கள் | 267,780 | 275,200 |
| **மொத்தம்** | **836,500** | **735,060** |

2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளின்போது விற்பனைக் கிரயங்கள் முறையே ரூ. 8,700,000 மற்றும் ரூ. 9,400,000 ஆகும்.

**நீர் செய்யவேண்டியது,**

தரப்பட்டுள்ள தகவல்களின் அடிப்படையில் 2016 மார்ச் 31 இல் **ST** யின் தொக்குகள் தொடர்பாக கணக்காய்வாளர் மேற்கொள்ளக்கூடிய இரண்டு (02) பகுப்பாய்வு விதிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(b) **அரவிந்த** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **ST** யின் கணக்காய்வுக்கு பொறுப்பான சிரேட்ட அலுவலர். கடன்பட்டோருக்கு 60 நாள் கடன் காலம் வழங்கப்பட்டுள்ளது. மூலதன செலவினப் பாதீடு அடங்கலாக வருடாந்தப் பாதீடுகளை பணிப்பாளர் சபை அங்கீகரித்துள்ளது.

(1) **அரவிந்த** 2016 மார்ச் 31 ஆந் திகதி நிலுவையாகவிருந்த 60 கடன்பட்டோர் மீதிகளிலிருந்து நேரடியான உறுதிப்படுத்தல்களைப் பெற்றுக்கொள்வதற்காக 10 கடன்பட்டோர்களை தெரிவு செய்தார். இந்தக் கோரிக்கைக்கு 2 கடன்பட்டோர் மாத்திரம் பதிலளித்து இருந்ததுடன், அந்த உறுதிப்படுத்திய மீதிகளும் **ST** யின் கணக்குப் பதிவேடுகளுடன் இணங்கவில்லை.

(2) அரவிந்த 2016 மார்ச் மாதத்திற்காக தயாரிக்கப்பட்ட சம்பளப் பட்டியலை மீளாய்வு செய்தார். 2016 மார்ச் மாதத்திற்காக சம்பளப் பட்டியல் முறைமை கணிப்பிடப்பட்ட நிகரச் சம்பளத்திற்கும் பேரேட்டின்படியான நிகரச் சம்பளத்திற்கும் இடையில் ரூபா. 1 மில்லியன் வித்தியாசம் இருப்பதனை அவர் அவதானித்தார்.

(3) ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொள்வனவுக்கான கொள்வனவுக் கட்டளைகள் முகாமைப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்படுகின்றன. எனினும் ரூ.80 மில்லியன் பெறுமதியான எந்திரக் கொள்வனவுக்கான அங்கீகரிக்கப்பட்ட கொள்வனவுக் கட்டளை கணக்காய்வாளருக்கு சமர்ப்பிக்கப்படவில்லை..

(4) **ST** கம்பனியானது இந்த நிதியாண்டின்போது ஆதனம், பொறி மற்றும் உபகரண சொத்து பௌதிக அறுதியீட்டினை (physical verification) மேற்கொள்ளவில்லை.

**நீர் செய்யவேண்டியது,**

மேலே (1) முதல் (4) வரை குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு விடயம் தொடர்பிலும் உரிய மீதிகள் தொடர்பில் போதிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு **ST** யின் கணக்காய்வாளர்கள் மேற்கொள்ள வேண்டிய மேலதிக கணக்காய்வு விதிமுறைகள் இரண்டினை (02) **நிரற்படுத்துக.**

(08 புள்ளிகள்)

(C) **வரையறுக்கப்பட்ட சொலிட் டயர்ஸ் (தனியார்) கம்பனியின்** வியாபாரக் கடன்பட்டோர் உறுதிப்படுத்தல் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட வேலைக்காக கணக்காய்வுக் கோப்பில் காணப்படும் ஒரேயொரு வேலைத்தாள் கீழே தரப்பட்டுள்ளது :

| | | | |
|---|---|---|---|
| வாடிக்கையாளர்: | | தயாரித்தவர்: | *சரத்* |
| விபரம்: | *வியாபாரக் கடன்பட்டோர்* | திகதி | 25.05.2016 |
| | | மீளாய்வு செய்தவர் | |
| | | திகதி | |

*உறுதிப்படுத்தல்கள் – வியாபாரக் கடன்பட்டோர்*

| | **ரூ'000** |
|---|---|
| வியாபாரக் கடன்பட்டோர் | 12,500 |

*செய்யப்பட்ட வேலை*

*நேரடி உறுதிப்படுத்தல்களுக்கான கோரிக்கை விடுத்தல்*

*பெறுபேறு*

*இரண்டு உறுதிப்படுத்தல்கள் கிடைக்கப் பெற்றன.*

மேலே தரப்பட்டுள்ள வேலைத்தாளில் அவதானிக்கக்கூடிய ஐந்து (05) பலவீனங்களை **இனங்காண்க.**

(05 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) **வரையறுக்கப்பட்ட புளூபெரி கம்பனி (BB),** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் வெளிவாரிக் கணக்காய்வாளராக **சித்தார்த் அசோசியேட்ஸினை** (பட்டயக் கணக்காளர் களை) நியமித்துள்ளார்.

**நீர் செய்யவேண்டியது,**

(a) **BB** யின் வெளிவாரிக் கணக்காய்வாளராக நியமனத்தினை ஏற்றுக் கொள்வதற்கு முன்னர் **சித்தார்த் அசோசியேட்ஸ்** கடைப்பிடிக்க வேண்டிய மூன்று (03) விதிமுறைகளை **விபரிக்குக.** (06 புள்ளிகள்)

(b) ஏற்றுக்கொள்ளல் விதிமுறைகளைப் பூர்த்திசெய்த பின்னர், **BB** க்கு அனுப்புவதற்காக **சித்தார்த் அசோசியேட்ஸ்** இன் கனிஷ்ட அங்கத்தவர் ஒருவர் தயாரித்த வரைபு ஈடுபடற் கடிதம் (draft engagement letter) கீழே தரப்பட்டுள்ளது.

*திகதி: …………..*

*பணிப்பாளர் சபைக்கு*

***வரையறுக்கப்பட்ட புளூபெரி (தனியார்) கம்பனி***

*அன்பார்ந்தவர்களே,*

***ஈடுபடற் கடிதம் (LETTER OF ENGAGEMENT)***

*உங்கள் கம்பனியின் 2016 மார்ச் 31 ஆந் திகதிய நிதிநிலைக் கூற்று, அந்தத் திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான முற்றடக்க வருமானக் கூற்று, உரிமையாண்மை மாற்றங்கள் பற்றிய கூற்று, ஆண்டிற்கான காசுப் பாய்வுக் கூற்று மற்றும் கணிசமான கணக்கீட்டுக் கொள்கைகளின் தொகுப்பு மற்றும் விளக்கக் குறிப்புகளை கணக்காய்வு செய்யுமாறு நீங்கள் எம்மைக் கேட்டிருந்தீர்கள். உங்கள் கோரிக்கையினை இந்தக் கடிதத்தின் மூலம் எமது தெளிவுபடுத்தலைத் தெரிவித்து, இத்தால் ஏற்றுக் கொள்கின்றோம். எமது கணக்காய்வானது நிதிக் கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் குறிக்கோளுடன் மேற்கொள்ளப்படுகிறது.*

***முகாமையின் பொறுப்பு***

*முகாமையும் ஆளுமை பாரப்படுத்தப்பட்டோரும் தமது பொறுப்புக்களை விளங்கி ஏற்றுக் கொள்ளும் அடிப்படையில் எமது கணக்காய்வு மேற்கொள்ளப்படும்.*

*(a) இலங்கைக் கணக்கீட்டு நியமங்கள் மற்றும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத் தேவைப்பாடுகளுக்கு அமைய நிதிக் கூற்றுக்களைத் தயாரித்து முன்னிலைப்படுத்துவதற்கும்,*

*(b) மோசடி அல்லது வழுக் காரணமாக நிதிக் கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்களைக் கொண்டிராத வகையில் நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானவை என முகாமை தீர்மானிக்கும் அத்தகைய அகக் கட்டுப்பாட்டிற்கும் முகாமை பொறுப்பாகும்.*

*(c) அத்துடன் நாங்கள்,*

*(i) நிதிக் கூற்றுக்களின் தயாரிப்புடன் தொடர்புபட்டதாக நீங்கள் தெரிந்துகொண்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய விடயங்களையும் சகல தகவல்களையும் பெறுவதற்கும்;*

*(ii) கணக்காய்வுத் தேவைக்காக காலத்திற்குக் காலம் நாம் கோருகின்ற மேலதிக தகவல்களைப் பெறுவதற்கும் ;*

*(iii) கணக்காய்வுச் சான்றினைப் பெறுவதற்கு அவசியமானோர் என நாம் தீர்மானிக்கும் கம்பனியைச் சார்ந்த நபர்களை தடையின்றித் தொடர்புகொள்ள வைப்பதற்கும்*

*முகாமை பொறுப்பாகும்.*

*கம்பனியின் சொத்துக்களைப் பாதுகாப்பதற்கும் மோசடிகள் அல்லது வழுக்களைத் தடை செய்வதற்கும் கண்டுபிடிப்பதற்கும் அத்துடன் ஒழுங்குபடுத்தற் தேவைப்பாடுகளுடன் ஒத்திசையாமைக்கும் பணிப்பாளர்கள் பொறுப்பாளராவர்.*

*கணக்காய்வின்போது உமது ஊழியரிடமிருந்து பூரண ஒத்துழைப்பினை நாம் எதிர்பார்க்கின்றோம்.*

***சித்தார்த் அசோசியேட்ஸ்***
*பட்டயக் கணக்காளர்கள்*

*…………………………. சார்பாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.*

மேலே தரப்பட்டுள்ள வரைபு ஈடுபடுத்தற் கடிதத்தில் காணப்படும் ஆறு (06) குறைபாடுகளை **இனங்காண்க.** (06 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட ரண்ஹிரு (தனியார்) கம்பனி** அண்மையில் அதன் கணக்கீட்டுத் தொழிற்பாடுகளை கணினிமயப்படுத்தியுள்ளது. புதிய முறைமைக்கு மாறுவதற்கு முன்னதாக சமாந்தர ஓட்டம் (Parallel run) இடம்பெறாததுடன் 2016 மார்ச் 31 இல் உள்ளபடியான மீதிகள் 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி உடனடியாக புது முறைமைக்கு மாற்றப்பட்டு தொழிற்பாடுகள் தொடரப்பட்டன. 2016 ஏப்ரல் 01 ஆந் திகதி செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட புதிய முறைமையுடன் கடமைகளும் ஊழியர்களுக்கு இடையில் பகிரப்பட்டன.

கம்பனியின் முறைமை அபிவிருத்தியாளர் (system developer) தனது வேலையை முடித்ததன் பின்னர், உள்ளீட்டு பூரணத்துவம் மீதான கட்டுப்பாடுகள் (controls over input completeness) மற்றும் உள்ளீட்டு செம்மை (input accuracy) போன்ற பிரயோகக் கட்டுப்பாடுகள் விரைவில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென ஆலோசனை வழங்கியுள்ளார்.

**நீர் செய்யவேண்டியது,**

(a) உள்ளீட்டுப் பூரணத்துவம் மீதான கட்டுப்பாடுகளுக்கு மூன்று (03) உதாரணங்களை **நிரற்படுத்துக**.
(03 புள்ளிகள்)

(b) உள்ளீட்டுச் செம்மை மீதான கட்டுப்பாடுகளுக்கு நான்கு (04) உதாரணங்களை **நிரற்படுத்துக.**
(04 புள்ளிகள்)

(C) "வழக்கமாக நிதிக் கூற்றுக்கள், உரிமம் தொடர்ந்தியங்கும் தாபனமாக எதிர்வுகூறக்கூடிய எதிர்காலம் வரையில் அதன் தொழிற்பாடுகளை தொடர்ந்தும் மேற்கொள்ளும் எனும் எடுகோளின் அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. எனவே, தொடர்ந்து இயங்குதல் மீளாய்வு கணக்காய்வின் மிகவும் முக்கிய பகுதியாகின்றது".

(a) நிறுவனமொன்றின் தொடர்ந்தியங்கும் எடுகோள் தொடர்பில் கணிசமான ஐயுறவினை ஏற்படுத்தக்கூடிய தொழிற்பாட்டுக் காட்டிகள் (operating indicators) மூன்றினை (03) **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)

(b) தொடர்ந்து இயங்கும் தாபன மீளாய்வினை மேற்கொள்வதில் கணக்காய்வாளர் பிரயோகிக்கக் கூடிய கணக்காய்வு விதிமுறைகள் மூன்றினை (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)
(மொத்தம் 25 புள்ளிகள்)

*பகுதி C யின் முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |